<u>**சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்.1**</u>
<u>**(மோட்டார் வாகன விபத்து வழக்குகள்)**</u>
<u>**விழுப்புரம்.**</u>

# <u>MCOP. No. 163/2022</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | மணிகண்டன் | தாலுக்கா | - | |
| தகப்பனார் பெயர்/ கணவர்பெயர் | - | ஸ்ரீதர் | தொழில் | - | கிளை மேலாளர், யுனைடட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பனி |
| வயது | - | | | - | |
| முகவரி | - | | | - | |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03-ம் தேதியன்று 1ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய **எ.ம.சா.1** ன் வாக்குமூலம் (1873ம் ஆண்டு 10வது சட்டத்தின் விதிகளின் ஏற்பாட்டின்படி) திரு.பாலசுப்ரமணியன், எல்.எல்.எம்., சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்.1, விழுப்புரம் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு திரு. ச.கோபிநாத், இளநிலை உதவியாளர் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

<u>**முதல் விசாரணை:**</u>

இன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தை சாட்சியத்தின் பகுதியாக கருதவேண்டியது ஆவணங்கள் குறியீடு இல்லை.

<u>**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு எதிராக தான் மு.த அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாகனத்தின் ஓட்டுநருக்கு எதிராக தான் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தில் காயம்பட்டவர்

3ம் நபர் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 3ம் தரப்பினர் காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதை பொறுத்து மோட்டார் வாகன ஆய்வாளர் விசாரிக்க வில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதற்கு அறிவிப்பு ஏதும் அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. மனுதாரருக்கு 2ம் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. விபத்து நடந்தது 01.04.2022 க்கு முன்பு நடந்தது என்நால் சரிதான்.

ஒப்பம்/-வி.பாலசுப்பிரமணியன்,
சிறப்பு சார்பு நீதிபதி எண்.1,
(மோட்டார் வாகன விபத்து வழக்குகள்),
விழுப்புரம்.